பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

01 09 2024 7 15

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. சுற்றுச்சூழலுக்கு உகந்த நீடித்த எதிர்காலத்தை உறுதி செய்வதில் தூய்மை எரிசக்தி பயன்பாடு அவசியம் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.

2. நாட்டில் சுற்றுச்சூழலுக்கு உகந்த மின்னணு உதிரி பாகங்கள் உற்பத்திக்கான புதிய திட்டம் விரைவில் தொடங்கப்பட உள்ளதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

3. இளைஞர்கள் சுற்றுச்சூழல் குறித்த புரிதலுடன் தங்களது திறமைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் வலியுறுத்தியுள்ளார்.

4. ரஷ்யா மீதான பொருளாதார தடையை எதிர்கொள்ளும் வகையில் சர்வதேச வர்த்தக பரிவர்த்தனைகளுக்கான நடைமுறைகளை மேற்கொள்ள கிரிப்டோ கரன்சி நடைமுறைகளை அந்நாட்டு அரசு அமல்படுத்தியுள்ளது.

5. அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யூகி பாம்ரி – பிரான்சின் ஒலிவெட்டி அல்பனோ இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

சுற்றுச்சூழலுக்கு உகந்த நீடித்த எதிர்காலத்தை உறுதி செய்வதில் தூய்மையான எரிசக்தி பயன்பாட்டைத் தவிர மாற்று முறை எதுவும் இல்லை என்று குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.

உத்தராகண்ட் மாநிலம் டேராடூனில் அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சிக் குழுமம் ஏற்பாடு செய்துள்ள நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், பருவநிலை மாற்றம் காரணமாக உலக நாடுகள் முன் எப்போதும் இல்லாத அளவிற்கு பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வருவதாகக் கூறினார்.

பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் சவால்களுக்குத் தீர்வுகாண விரிவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை திரு. ஜக்தீப் தங்கர் வலியுறுத்தினார்.

<<<<>>>>

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பான வழக்குகளில் விரைவாக நீதி கிடைக்கச் செய்ய வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் நேற்று மாவட்ட நீதிமன்றங்களுக்கான இரண்டு நாள் தேசிய மாநாட்டை அவர் தொடங்கி வைத்துப் பேசினார்.

சமூகத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு போன்றவை கவலை அளிப்பதாக உள்ளது என்று குறிப்பிட்டார்.

பெண்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

75 ஆண்டுகால உச்சநீதிமன்றத்தின் பயணம், இந்திய அரசியலமைப்பு மற்றும் ஜனநாயகத்திற்கு வலுசேர்ப்பதாக உள்ளது என்று அவர் கூறினார்.

நாட்டின் நலன் சார்ந்த அம்சங்களில் மக்களின் அடிப்படை உரிமைகளை உறுதி செய்வதில் உச்சநீதிமன்றம் முக்கிய பங்காற்றியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தேசிய ஒருமைப்பாட்டின் கவசமாக திகழும் உச்சநீதிமன்றத்தின் செயல்பாடுகளுக்கு பிரதமர் பாராட்டு தெரிவித்தார்.

நாட்டின் ஜனநாயக மாண்புகளை பாதுகாப்பதில் நீதிமன்றங்களுக்கு கூடுதல் பொறுப்புள்ளதாக அவர் தெரிவித்தார்.

புதிதாக இயற்றப்பட்டுள்ள 3 குற்றவியல் சட்டங்களில் மக்களின் நலன் கண்ணியம் மற்றும் நீதி ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

நீதி கிடைப்பதில் ஏற்படும் கால தாமதங்களை தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நீதிமன்ற உள்கட்டமைப்பு வசதிகளின் மேம்பாட்டிற்காக கடந்த 10 ஆண்டுகளில் 8 ஆயிரம் கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<>>>>

நாட்டில் சுற்றுச்சூழலுக்கு ஏற்ற வகையில் நீடித்த மின்னணு உதிரி பாகங்கள் உற்பத்திக்கான புதிய திட்டத்தை மத்திய அரசு விரைவில் தொடங்க உள்ளதாக மத்திய மின்னணு மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு பேசிய அவர், நாட்டில் பயன்படுத்தப்பட்டு வரும் மொபைல் சாதனங்களில் 99 சதவீதம் உள்நாட்டிலேயே தயாரிக்கப்படுவதாக கூறினார்.

ஆப்பிள் நிறுவனம் தனது புதிய மொபைல் ஃபோன் உற்பத்தியை இந்தியாவில் தொடங்க உள்ளதாக அவர் தெரிவித்தார்.

நாட்டின் மின்னணு சாதனங்களின் உற்பத்தி மதிப்பு 2022-23ஆம் ஆண்டில் 105 பில்லியன் டாலர்களாக அதிகரித்துள்ளது என்று அவர் கூறினார்.

சாலை, ரயில் மற்றும் விமானப் போக்குவரத்து, துறைமுகங்கள் போன்ற உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்தும் வகையில் இரண்டு ட்ரில்லியன் டாலர் அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்ய மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

சிறிய அளவிலான தொழில்நுட்ப நிறுவனங்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் மத்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக திரு. அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<>>>>

பருவநிலை மாற்றங்களை எதிர்கொள்ளும் வகையில், இளைஞர்கள் சுற்றுச்சூழல் குறித்த புரிதலுடன் தங்களது திறமைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று மத்திய சுற்றுச்சூழல்துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் வலியுறுத்தியுள்ளார்.

மும்பை இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு பேசிய அவர், மின்னணுக் கழிவுகள், ஒருமுறை பயன்பாடு கொண்ட நெகிழிப் பொருட்களின் பயன்பாட்டை தவிர்ப்பது, தண்ணீர் சேமிப்பு, எரிசக்தி பாதுகாப்பு, ஆரோக்கிய வாழ்வியல் முறை உள்ளிட்ட 7 முக்கிய அம்சங்களை எடுத்துரைத்தார்.

அன்னையின் பெயரில் ஒரு மரம் என்ற இயக்கத்தின்கீழ் அவர் மரக்கன்று ஒன்றையும் திரு. பூபேந்தர் யாதவ் நட்டு வைத்தார்.

<<<<>>>>

ரஷ்யா மீது மேற்கத்திய நாடுகள் பொருளாதார தடை விதித்ததை அடுத்து கிரிப்டோகரன்சி பயன்பாடு கொண்ட சர்வதேச பரிவர்த்தனை நடைமுறைகளை அந்நாட்டு அரசு இன்று முதல் தொடங்குகிறது.

சர்வதேச அளவில் வர்த்தக பரிவர்த்தனைகளுக்கான வழக்கமான நடைமுறைகளில் எழுந்துள்ள சவால்கள் காரணமாக மாற்று முறையாக இந்த கிரிப்டோகரன்சி நடைமுறை அமலுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சர்வதேச வர்த்தக பரிவர்த்தனைகளில் கிரிப்டோகரன்சியை சோதனை அடிப்படையில் பயன்படுத்த கடந்த மாதம் 8ஆம் தேதி அந்நாட்டு அதிபர் திரு. விளாடிமிர் புடின் ஒப்புதல் அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

எனினும் இந்தப் புதிய வர்த்தகப் பரிவர்த்தனைக்கான கட்டண நடைமுறைகள் சர்வதேச வர்த்தகம் மற்றும் அதன் பாதுகாப்பு கட்டமைப்பில் எவ்வித தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்பது குறித்து தெளிவுபடுத்தப்படவில்லை.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீர் சட்டப்பேரவைக்கு முதற்கட்டமாக இம்மாதம் 18ஆம் தேதி தேர்தல் நடைபெற உள்ள நிலையில், அங்கு பிரச்சாரம் மேற்கொள்வதற்காக காங்கிரஸ் கட்சியின் சார்பில் 40 பேர் கொண்ட நட்சத்திரப் பேச்சாளர்களின் பெயர்களை அக்கட்சி அறிவித்துள்ளது.

இதற்கான பட்டியலை அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. கே.சி. வேணுகோபால் நேற்று வெளியிட்டார்.

இப்பட்டியலில் காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே, அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு தலைவர் திருமதி

சோனியா காந்தி, அக்கட்சியின் முன்னாள் தலைவர் திரு. ராகுல் காந்தி மற்றும் பிரியங்கா காந்தி உட்பட பலர் இடம்பெற்றுள்ளனர்.

<<<<>>>>

சென்னை – நாகர்கோவில் இடையிலான புதிய வந்தேபாரத் எக்ஸ்பிரஸ் ரயில்சேவை நேற்றிரவு மணி 11.30க்கு நாகர்கோவில் ரயில் நிலையம் வந்தடைந்தது.

இந்த ரயிலை முன்னாள் மத்திய இணையமைச்சர் திரு. பொன் ராதாகிருஷ்ணன், காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. விஜய் வசந்த் உள்ளிட்ட பலர் வரவேற்றனர்.

இந்த புதிய ரயில் சேவை தங்களுக்கு மிகவும் வசதியாக உள்ளது என்று பயனாளி ஒருவர் தெரிவித்தார்.

<<<<>>>>

குஜராத் மாநிலம் சௌராஷ்டிரா மற்றும் கட்ச் மாவட்டங்கள், மகராஷ்டிரா மற்றும் கர்நாடக மாநிலங்களின் கடலோரப் பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

அஸ்னா என்று பெயரிடப்பட்ட புயல் மேற்கு மற்றும் தென்மேற்கு பகுதியில் நகர்ந்து வடமேற்கு அரபிக் கடலில் நாளை கரையைக் கடக்கக்கூடும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக ஒடிசா, சத்தீஸ்கட், ஆந்திரப்பிரதேச கடலோரப் பகுதிகள் மற்றும் தெலங்கானா மாநிலங்களின் ஒருசில இடங்களில் மிதமானது முதல் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யூகி பாம்ரி – பிரான்சின் ஒலிவெட்டி அல்பனோ இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெறும் ஆடவர் இரட்டையர் பிரிவு ஆட்டத்தில் இந்த இணை ஸ்பெயினின் **Marcel Granollers** – அர்ஜெண்டினாவின் **Horacio Zeballos** இணையை எதிர்கொள்கிறது.

-----------

தாய்லாந்து சர்வதேச டென்னிஸ் போட்டியில் இன்று நடைபெறும் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் வைதேகி சௌத்ரி - ஜப்பானின் ரினா சாய்கோவை எதிர்கொள்கிறார்.

-----------

ஜெர்மனியில் ஹான்ஓவர் நகரில் நடைபெற்று வரும் காதுகேளாதோருக்கான துப்பாக்கிச் சுடும் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியா, ஒரு தங்கம், 2 வெள்ளி மற்றும் ஒரு வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளது.

மகளிர் 10 மீட்டர் ஏர்பிஸ்டல் பிரிவில் இந்தியாவின் அனுயா பிரசாத் தங்கப்பதக்கம் வென்றார்.

ஆடவர் 10 மீட்டர் ஏர்பிஸ்டல் பிரிவில் அபினவ் தேஷ்வால் வெள்ளிப் பதக்கமும், சுபம் வசிஷ்ட் வெண்கலப் பதக்கமும் வென்றனர்.

ஆடவர் 10 மீட்டர் ஏர்பிஸ்டல் குழுப் போட்டியில் அபினவ் தேஷ்வால், சுபம் வசிஷ்ட், சேத்தன் சப்கல் குழு வெள்ளிப் பதக்கம் வென்றது.

-------------

பாரீஸ் பாராலிம்பிக் போட்டியில் மகளிர் 10 மீட்டர் ஏர்பிஸ்டல் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற ரூபினா ஃபிரான்சிஸ்-க்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் நாட்டிற்கு பெருமை சேர்க்கக்கூடிய மற்றொரு தருணம் இது என்று குறிப்பிட்டுள்ளார்.

போட்டியில் சிறப்பான கவனம், உறுதிப்பாடு ஆகியவை வெற்றி தேடித்தந்துள்ளதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

பாராலிம்பிக் போட்டியில் இந்தியா இதுவரை ஒரு தங்கம், ஒரு வெள்ளி, 3 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.

------------

தென்கொரியாவில் நடைபெற்ற ஆசிய ஜூனியர் ஜூடோ சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் ஹிமான்ஷி தோகாஷ் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

19 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் 63 கிலோ எடைப் பிரிவில் அவர் இப்பதக்கதைக் கைப்பற்றினார்.

--------------

துரந்தோ கோப்பை கால்பந்துப் போட்டியில் ஒருங்கிணைந்த கிழக்கு FC அணி சாம்பியன் பட்டம் வென்றது.

நேற்று நடைபெற்ற மோகன் பஹன் அணிக்கான இறுதி ஆட்டத்தில் இரு அணிகளும் தலா 2 கோல்கள் அடித்திருந்த நிலையில், பெனால்டி சூட்-அவுட் முறை கடைபிடிக்கப்பட்டது.

இதில் 4-3 என்ற கோல் கணக்கில் ஒருங்கிணைந்த கிழக்கு FC அணி வெற்றி பெற்று கோப்பையைக் கைப்பற்றியது.

**<<<<The End>>>>**